# මැතිවරණ කොමිෂන් සභාව
## தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය: 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல்: 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.elections.gov.lk* *e-mail : info@elections.gov.lk*


| මගේ අංකය : | ඔබේ අංකය : | දිනය : |
|---|---|---|
| எனது இல. TR/PE/01/2020 | உமது இல. | திகதி 2020.06.19 |

**சுற்றறிக்கை இலக்கம் -TR/2020/05**

**சகல மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்**
**பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,**

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**
**வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.**

2020.08.05 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தங்களது மாவட்டத்தின் போக்குவரத்து தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக முடியுமானவரை அரச வாகனங்களை பயன்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

02. வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற தேர்தல் பணிக்குழுவினரின் போக்குவரத்து வசதிக்காக முடிந்த வரை அரச வாகனங்களையும், மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள், தனியார் பஸ்கள் ஆகியவற்றையும் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும் உங்களது அனுமதியுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்து வரப்படுகின்ற தனியார் வாகனங்களையும் இதற்காக ஈடுபடுத்திக்கொள்ள முடியும். எனினும் இவ்வனைத்து வாகனங்களும் போதாமற் போகும் சந்தர்ப்பத்தில் தேர்தல் பணிக்குழுவினரின் போக்குவரத்திற்கு மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் போக்குவரத்திற்கு மாத்திரம் வாடகை அடிப்படையில் உங்களது மாவட்டத்திலிருந்து தனியார் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்கள் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்ட வாகனங்களாக இருக்க வேண்டியிருப்பினும், தேவைப்பாட்டின் அடிப்படையில் மூன்றாம் தரப்புக் காப்புறுதியுடனான வாகனங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியும். எனினும், விபத்தொன்று நிகழும் சந்தர்ப்பத்தில் அல்லது நட்டமேற்படும் சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணைக்குழு அதில் எந்த வகையிலும் தலையிடாது என்பதனை அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். அதற்காக அவர்களது இணக்கத்தையும் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

03. உங்களால் பெற்றுக் கொள்ளப்படும் வாடகை வாகனங்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் கீழ் கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.

| ஒரு கிலோமீற்றருக்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் | | |
|---|---|---|
| **வாகன வகை** | **பெற்றோல் வாகனம்** | **டீசல் வாகனம்** |
| 08 ஆசனங்களிலும் குறைந்த வேன்/ ஜீப் | ரூ.52.00 | ரூ.41.00 |
| 08-14 ஆசனங்களைக் கொண்ட வேன் | ரூ.58.00 | ரூ.47.00 |
| 15-25 ஆசனங்களைக் கொண்டவை | ரூ.68.00 | ரூ.53.00 |
| 26-39 ஆசனங்களைக் கொண்டவை | - | ரூ.62.00 |
| 40 ஆசனங்களிலும் அதிகமானவை | - | ரூ.73.00 |

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வாகனங்களுக்காக மேற்கூறப்பட்டவாறான கட்டணங்களைத் தவிர, தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிட்ட நேரத்திலிருந்து தெரிவத்தாட்சி அலுவலரால் வாகனத்தை விடுவிக்கும் நேரம் வரையான காலப்பகுதிக்கு கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் தரித்திருத்தல் கட்டணத்தை செலுத்த முடியும்.

**08 ஆசனங்களிலும் குறைவான வாகனங்களுக்காக ஒரு மணித்தியாலத்திற்கு (வேன், ஜீப்) - ரூ. 60.00**
**08 ஆசனங்கள் அல்லது அதனிலும் அதிகமான வாகனங்களுக்காக ஒரு மணித்தியாலத்திற்கு - ரூ. 80.00**

ஏதேனும் விசேட சந்தர்ப்பத்தில் மேற்கூறப்பட்ட வாகனங்களைத் தவிர, வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற கெப் மற்றும் கார்கள் அவசியப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான விலை அளவுகளை பெற்று அந்த விலை அளவுகள் தொடர்பாக உங்களது பரிந்துரையுடன் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் முன்னனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் முன்னனுமதி பெறப்பட்ட பின்னர் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட கெப் மற்றும் கார்களை கடமையிலீடுபடுத்த வேண்டிய முறைகள் பற்றிய தகவல்களைக் குறித்துக் கொள்ளல் வேண்டுமென்பதுடன், தேர்தல் முடிவடைந்த பின்னர் அத்தகவல்களை தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இந்தத் தேர்தல் கொரோனா தொற்றுநோய் கட்டுப்படுத்தப்பட்ட நிலைமையின் கீழ் நடாத்தப்படுவதனால் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றுதல் வேண்டும். அதற்கிணங்க உங்களுடைய மாவட்டத்தினுள் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும்போது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சாரதிகளுக்கான தங்குமிட வசதிகள், உணவு பானங்கள் ஆகியவற்றை வழங்குதல் தொடர்பான சிக்கல்களை குறைத்துக்கொள்ள முடியும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டதன் பின்னர் மேலும் வாகனங்கள் தேவைப்படுமாயின் மாத்திரம் கொழும்பு வாகன குழாமிலிருந்து வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

05. மேலும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வேன்களுக்கு ஒரு கிலோமீற்றருக்காக அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக இரண்டு நாட்களுக்கான சாரதிக் கட்டணமாக ஒரு நாளுக்கு 750.00 ரூபா வீதம் (தேர்தல் தினத்திற்கு முந்திய தினமும், தேர்தல் தினமும்) 1,500.00 ரூபா விசேட கொடுப்பனவு வழங்க முடியும். 26 ஆசனங்களுக்கும் மேற்பட்ட வாகனங்களின் சாரதி உதவியாளர்களுக்கும் இக்கொடுப்பனவை வழங்க முடியும்.

06. மேலும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு, அந்த வாகனங்களை நிறுத்திவைக்கப்படும் இடத்திலிருந்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரது அலுவலகத்திற்கு அறிக்கையிடச் செல்கின்ற போதும், விடுவித்த பின்னர் மீண்டும் வருவதற்கும் மாவட்டத்தினுள் ஓடிய கிலோ மீட்டர்களின் அளவை பதவிநிலை அலுவலரால் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். இதற்கான பொருத்தமான படிவங்களையும், ஆவணங்களையும் நீங்கள் பேணி வருதல் மிகச் சிறந்ததாகும்.

07. வாடகைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்கள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் அறிக்கையிட்ட பின்னரான முழுக் காலத்தினுள்ளும் குறைந்தபட்சம் 50 கிலோமீற்றர்களாவது ஓடியிருக்காத சந்தர்ப்பத்தில் அவ்வாகனங்களுக்கு 50 கிலோமீற்றருக்கான ஆகக் குறைந்த கட்டணத்தை செலுத்த முடியுமென்பதுடன், 50-100 கி.மீ. இற்கு இடைப்பட்ட தூரம் வரை ஓடிய சந்தர்ப்பங்களில் அந்த வாகனங்களுக்கு 100 கி.மீ. தூரத்திற்கும், 100 கி.மீ. க்கும் மேற்பட்ட தூரம் ஓடியிருக்கும் சந்தர்ப்பங்களின்போது, ஓடியிருக்கும் தூரத்திற்கும் கட்டணத்தை செலுத்த வேண்டும். இதனைத் தவிர மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு தரித்து நிற்றலுக்கான கட்டணத்தையும் அந்தந்த சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செலுத்துதல் வேண்டும். எனினும் வாகனத்தில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறு அல்லது வேறேதும் காரணத்தினால் வாகனத்தை ஓட்ட முடியாத சந்தர்ப்பங்களில், அவ்வாகனங்களுக்கு எவ்வித கட்டணத்தையும் செலுத்தலாகாது.

08. வாக்களிப்பு நிலையப் பணிக்குழுவினரின் போக்குவரத்து மற்றும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தவிர, நலனோம்புகை அலுவல்கள் போன்ற ஏனைய தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வாகனங்களை பயன்படுத்தலாகாது.

09. உங்களது அனுமதியுடன் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் எடுத்துவரப்படும் வாகனங்களுக்காக எதிர்காலத்தில் வெளியிடப்படும் தேர்தல் ஆணைக்குழுவின் போக்குவரத்துச் சுற்றறிக்கை ஊடாக அங்கீகரிக்கப்படும் கட்டண அளவுகளின் அடிப்படையிலும், வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் எடுத்துவரப்படும் வாகனங்களுக்காக தாபனக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்கமைய மைல் கூலிக் கொடுப்பனவு வழங்கப்படுமென அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். (அவ்வாறான கொடுப்பனவுகளுக்காக இச்சுற்றறிக்கை ஏற்புடையதல்ல.)

10. வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளல், ஓட்டத்தில் ஈடுபடுத்துதல் மற்றும் அதற்கான கொடுப்பனவுகளை பரிந்துரை செய்தல் போன்ற நடவடிக்கைகள் பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறுதல் வேண்டுமென்பதுடன், இவ்வாகனங்கள் தொடர்பான கீழ்கண்ட தகவல்களை ஆவணப்படுத்தி குறிப்புக்களை வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளைத் தயவு செய்து மேற்கொள்ளவும்.)

(i). வாகன இலக்கம்
(ii). வாகனத்திற்கான எரிபொருள் வகை
(iii). உரிமையாளரின் பெயர், முகவரி
(iv). வாகனத்தின் ஆசன எண்ணிக்கை
(v). தேர்தல் பணிகளுக்காக அறிக்கையிடப்பட்ட திகதியும், நேரமும்
(vi). விடுவிக்கப்பட்ட திகதியும், நேரமும்

(vii). ஓட்டத் தூரம் கிலோமீற்றர்களில். (வாகனத்தை எடுத்து வருவதற்கும், எடுத்துச் செல்வதற்கும் உரியவாறு ஓட வேண்டிய கி.மீ.உட்பட)
(viii). ஓட்டத்திற்காக செலுத்தப்பட்ட தொகை
(ix). தரித்திருப்பதற்காக செலுத்தப்பட்ட தொகை
(x). சாரதிக்கான விசேட கொடுப்பனவு
(xi). சேவையிலீடுபடுவதற்கு அனுமதி வழங்கிய அலுவலரின் பெயர், கையொப்பம்,பதவிப் பெயர்

11. வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது இச்சுற்றறிக்கைக்கமைவாக செலுத்தப்படும் கட்டணங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய கடிதமொன்றை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். மேலும் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்க வேண்டிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்தின் பெயர், முகவரி என்பவற்றையும் அக்கடிதத்தில் உள்ளடக்குவதற்கு தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்.

12. தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலப்பகுதிக்குள் நீங்கள் பெற்றுக்கொண்ட வாடகை வாகனத்திற்கான கொடுப்பனவுகள் பூர்த்தி செய்திருக்கப்பட வேண்டியதுடன், அக்கொடுப்பனவுகள் பூர்த்தியானதன் பின்னர் மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள ஆவணத்தை பிரதி/உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

13. வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கான கொடுப்பனவுகள், உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், குறித்த கொடுப்பனவுகளை ஏனைய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்கு அல்லது தேர்தல்கள் செயலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டாமென அவர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

14. மேலும் TR/2020/04 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம், இலங்கை பொலீஸாரினதும், பாதுகாப்புப் படையினரதும் தேவைப்பாடுகளுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கும் இந்த கட்டணங்களின் கீழ் இலங்கைப் பொலீஸிற்காக ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுகளின் மூலம் செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை உரிய தேர்தல் அலுவலகங்களில் பதிவுசெய்து கொள்ளுதல் கட்டாயமென பொலீஸ் அத்தியட்சகர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.
(தேர்தல்ஆணைக்குழு சார்பாக)

பிரதிகள் :- 1. பொலீஸ் மா அதிபர் - தேர்தல் பணிகளுக்காக இலங்கைப் பொலீஸிற்குத் தேவைப்படும் வாடகை அடிப்படையிலான தனியார் வாகனங்களை, TR/2020/04 ஆம் இலக்க சுற்றறிக்கை ஊடாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் கட்டண அளவுகளின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும். அதற்காக இலங்கை பொலீஸிற்கு ஒதுக்கப்படும் நிதி ஏற்பாட்டின் மூலம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
2. கணக்காய்வாளர் நாயகம்
3. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்) உட்பட தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள்
4. தலைமை நிதி அலுவலர்
5. தலைமைக் கணக்காளர்
6. தலைமை உள்ளகக் கணக்காய்வாளர்
7. கணக்காளர் (கொடுப்பனவுகள்)

සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி : 011-2868444
ෆැක්ස්/ தொலைநகல்: 011-2868445
*e-mail :chairman@elections.gov.lk*

සහකාර මැතිවරණ කොමසාරිස් (පාලන)
உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்)
දුරකථන/தொலைபேசி:011-2868450
ෆැක්ස්/தொலைநகல் : 011-2868450
*e-mail : admin@elections.gov.lk*

පරිපාලන නිලධාරි
நிருவாகஅலுவலர்
දුරකථන/தொலைபேசி: 011-3083371
ෆැක්ස්/தொலைநகல் :011-3083371
*e-mail : info@elections.gov.lk*